செய்தி வெளியீடு எண்:407 நாள்: **31.5.2008**

# தமிழகத்தில் மூன்று பல்கலைக் கழகங்கள் மத்திய அமைச்சர் தமிழக முதலமைச்சருக்கு கடிதம்

* * *

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மத்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.அர்ஜுன் சிங் அவர்களை, நேரில் சந்தித்து விவாதித்த போது, கேட்டுக் கொண்டபடி கோவையில் உலகத் தரத்திலான மத்திய பல்கலைக் கழகம் (World Class University) ஒன்றும்; திருச்சியில் மேலாண்மைக்கான இந்தியக் கல்வி நிறுவனம் (I.I.M.) ஒன்றும்; திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்றும் அமைக்கப்படும் என்று உறுதி கூறி கடிதம் ஒன்றை 23–5–2008 அன்று தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எழுதியிருக்கின்றார்கள். மேலும் அந்தக் கடிதத்தில் இந்த மத்திய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதற்குரிய நிலங்களைத் தமிழக அரசு தேர்வு செய்து, அவற்றை இலவசமாக வழங்கிட வேண்டும் என்றும் மத்திய அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.**

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9